**ENTRANCE EXAMINATION FOR ADMISSION, MAY 2012.**

**M.A. (TAMIL)**

**COURSE CODE : 366**

Register Number :

*Signature of the Invigilator (with date)*

---

COURSE CODE : 366

Time : 2 Hours

Max : 400 Marks

*Instructions to Candidates :*

1. Write your Register Number within the box provided on the top of this page and fill in the page 1 of the answer sheet using pen.
2. Do not write your name anywhere in this booklet or answer sheet. Violation of this entails disqualification.
3. Read each of the question carefully and shade the relevant answer (A) or (B) or (C) or (D) in the relevant box of the ANSWER SHEET using HB pencil.
4. Avoid blind guessing. A wrong answer will fetch you –1 mark and the correct answer will fetch 4 marks.
5. Do not write anything in the question paper. Use the white sheets attached at the end for rough works.
6. Do not open the question paper until the start signal is given.
7. Do not attempt to answer after stop signal is given. Any such attempt will disqualify your candidature.
8. On stop signal, keep the question paper and the answer sheet on your table and wait for the invigilator to collect them.
9. Use of Calculators, Tables, etc. are prohibited.

1. எத்தொகை முடித்தான் பூரிக்கோ

(A) குறுந்தொகை (B) கலித்தொகை (C) பதிற்றுப்பத்து (D) நெடுந்தொகை

2. ஒற்றை எண் அடிப்படையில் அமைந்த அகநானூற்றுப் பாடல்களின் திணை

(A) முல்லை (B) குறிஞ்சி (C) பாலை (D) மருதம்

3. குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப்படும் நூல்

(A) முத்துவீரியம் (B) இலக்கண விளக்கம்

(C) நன்னூல் (D) எதுவும் இல்லை

4. தமிழ் இசையின் தாய் என்று அழைக்கப்படுபவர்

(A) காரைக்கால் அம்மையார் (B) மங்கையர்கரசியார்

(C) கே.பி. சுந்தராம்பாள் (D) யாரும் இல்லை

5. கலம்பகம்

(A) பதினெட்டு உறுப்புகளை உடையது (B) பதினாறு உறுப்புகளை உடையது

(C) இருபத்தோரு உறுப்புகளை உடையது (D) எதுவும் இல்லை

6. ஆதி உலாவின் மறுபெயர்

(A) மூவர் உலா (B) ஞான உலா

(C) திருக்கயிலாய ஞான உலா (D) எதுவும் இல்லை

7. ஆயிரம் யானை அமரிடை வென்ற வீரனுக்குப் பாடுவது

(A) யானை மரம் (B) மறக்கள வஞ்சி

(C) பரணி (D) செறுக்கள வழி

8. தமிழில் எழுந்த முதல் புதினம்

(A) கமலாம்பாள் சரித்திரம் (B) ஒரு புளிய மரத்தின் கதை

(C) பிரதாப முதலியார் சரித்திரம் (D) முத்து மீனாட்சி

9. தமிழில் புனைகதை மன்னன் என்று அழைக்கப்படுபவர்

(A) கு. பா. இராஜகோபாலன் (B) மௌனி

(C) புதுமைப்பித்தன் (D) ராஜாஜி

10. தமிழ்நாட்டின் வேட்ஸ் வேர்த் எனப் போற்றப்படும் கவிஞர்

(A) பாரதிதாசன் (B) முடியரசன் (C) வாணிதாசன் (D) சுரதா

11. பெரியார் பாசறையின் போர்வாள் என்று அழைக்கப்படும் கவிஞர்

(A) தமிழ் ஒளி (B) புதுவைச் சிவம் (C) பாரதிதாசன் (D) முருகு சுந்தரம்

12. பாரதியார் புதுவையில் பெண்களுக்காகவே நடத்திய இதழின் பெயர்

(A) விஜயா (B) சக்கரவர்த்தினி (C) சுதேசமித்திரன் (D) இந்தியா

13. தமிழில் புதுக்கவிதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

(A) பாரதிதாசன் (B) பாரதியார் (C) நா. பிச்ச மூர்த்தி (D) பெ. தூரன்

14. தமிழில் வசனக் கவிதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

(A) பாரதிதாசன் (B) பாரதியார் (C) நா. பிச்ச மூர்த்தி (D) வாணிதாசன்

15. நம்பி அகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்கு எழுந்த இலக்கியம்

(A) அம்பிகாபதிக் கோவை (B) பாண்டிக் கோவை

(C) தஞ்சை வாணன் கோவை (D) திருக்கோவையார்

16. மகடுவை முன்னிலைப் படுத்தி இலக்கணம் கூறிய நூலின் பெயர்

(A) நன்னூல் (B) தொல்காப்பியம்

(C) யாப்பருங்கலம் (D) யாப்பருங்கலக் காரிகை

17. காண்டிகை உரை என்பது

(A) சுருக்கமான உரை (B) விரிவான உரை

(C) இறுக்கமான உரை (D) எதுவும் இல்லை

18. புறப்பொருள் வெண்பா மாலை விவரிக்கும் புறத்திணைகளின் எண்ணிக்கை

(A) ஏழு (B) பத்து (C) பன்னிரண்டு (D) பதினைந்து

19. தண்டி அலங்காரம் என்பது

(A) தமிழ் மொழிபெயர்ப்பு இலக்கண நூல் (B) வடமொழி இலக்கண நூல்

(C) தமிழ் இலக்கண நூல் (D) எதுவும் இல்லை

20. தமிழ் நாடக இலக்கியத்தின் தந்தை என்ற அழைக்கப்படுபவர்

(A) பம்மல் சம்பந்த முதலியார் (B) சங்கரதாஸ் சுவாமிகள்

(C) பருதிமார் கலைஞர் (D) தி. க. ஷண்முகம்

21. அகநானூறு கொண்ட பிரிவுகளில் ஒன்று

(A) வையை (B) செவ்வேள்

(C) மணிமிடைப் பவளம் (D) வெறியயர்தல்

22. 'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' – இவ்வரி இடம்பெறும் நூல்

(A) கலித்தொகை (B) பதிற்றுப்பத்து

(C) நற்றிணை (D) பரிபாடல்

23. பதிற்றுப்பத்து என்ற நூலில் போற்றப்பெறுவோர்

(A) சேரர்கள் (B) பாண்டியர்கள் (C) வேளிர் (D) சோழர்கள்

24. நற்றிணைக்கான பாடல்களின் பேரெல்லை

(A) பத்து (B) ஆறு (C) பன்னிரண்டு (D) முப்பத்தொன்று

25. 'உலகம் உவப்ப வலனேர்பு' எனத் தொடங்கும் நூல்

(A) குறுந்தொகை (B) திருமுருகாற்றுப்படை

(C) நற்றிணை (D) புறநானூறு

26. நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்

(A) பதிற்றுப்பத்து (B) சிறுபாணாற்றுப் படை

(C) பட்டினப்பாலை (D) நற்றிணை

27. தொண்ணூற்றொன்பது மலர்களைப் புனைந்து காட்டும் நூல்

(A) முல்லைப்பாட்டு (B) நெடுநல் வாடை

(C) மதுரைக் காஞ்சி (D) குறிஞ்சிப்பாட்டு

28. 'உண்டாலம்ம இவ்வுலகம்' எனப் பாடிய புலவர் பெயர்

(A) அவ்வையார் (B) இளம் வழுதி (C) அறிவுடை நம்பி (D) கபிலர்

29. பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் எழுதிய நூல்

(A) நெடுநல் வாடை (B) முல்லைப்பாட்டு (C) நற்றிணை (D) பதிற்றுப்பத்து

30. முல்லைக் கலியினைப் பாடிய புலவர் பெயர்

(A) இளநாகனார் (B) அம்மூவனார் (C) நல்லுருத்திரன் (D) கபிலர்

31. 'திராவிட சிசு' என்று திருஞான சம்பந்தரை அழைத்தவர்

(A) ஆதிசங்கரர் (B) இராமானுசர் (C) மத்துவர் (D) ஆதிபிரம்மர்

32. பெரியாழ்வாரின் இயற்பெயர்

(A) விப்பிர நாராயணர் (B) விஷ்ணு சித்தர்

(C) குருகைக் காவலன் (D) சடகோபன்

33. புத்த காப்பியம்

(A) மணிமேகலை (B) சூளாமணி

(C) நீலகேசி (D) சிலப்பதிகாரம்

34. நம்மாழ்வாரின் காலம்

(A) ஆறாம் நூற்றாண்டு (B) ஏழாம் நூற்றாண்டு

(C) எட்டாம் நூற்றாண்டு (D) ஒன்பதாம் நூற்றாண்டு

35. திருமாலின் வாளின் அம்சமாகத் தோன்றியவர்

(A) பொய்கை ஆழ்வார் (B) பேய் ஆழ்வார்

(C) பூதத்தாழ்வார் (D) திருமழிசை ஆழ்வார்

36. பெருமாள் திருவந்தாதி பாடிய ஆழ்வார்

(A) நம்மாழ்வார் (B) பெரியாழ்வார்

(C) குலசேகர ஆழ்வார் (D) திருமங்கை ஆழ்வார்

37. சமண அற நூள்

(A) நரி விருத்தம் (B) தம்மபதம்

(C) எசோதர காவியம் (D) சுத்த பிடகம்

38. சமண சமயத்தை நிறுவிய இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர்

(A) விருஷப தேவர் (B) இடப தேவர்

(C) பார்சுவ நாதர் (D) மகாவீரர்

39. 'பிரம்மம் ஒன்றே உயிர் பொருள்' என்றவர்

(A) சங்கரர் (B) இராமானுசர் (C) அரவிந்தர் (D) மத்துவர்

40. திருக்கை வழக்கம் என்னும் நூலினை எழுதியவர்

(A) சேக்கிழார் (B) கம்பர்

(C) சுந்தரர் (D) உமாபதி சிவாச்சாரியார்

41. அருங்கலச் செப்பு என்னும் நீதி நூல் எச்சமயத்தைச் சார்ந்தது

(A) சைவம் (B) வைணவம் (C) சமணம் (D) பௌத்தம்

42. பதுமனார் தொகுத்த அற நூல் எது?

(A) திரிகடுகம் (B) நாலடியார்

(C) பழமொழி நானூறு (D) ஏலாதி

43. முதுமொழிக் காஞ்சியின் மையப் பொருள் எது?

(A) கல்லாமை (B) இல்லாமை (C) நிலையாமை (D) பொய்யாமை

44. இன்னா நாற்பதின் ஆசிரியர்

(A) நல்லாதனார் (B) கபிலர்

(C) நல்லந்துவனார் (D) பூதஞ்சேந்தனார்

45. 'வாக்குண்டாம்' எனத் தொடங்கும் நூல் எது?

(A) நல்வழி (B) கொன்றை வேந்தன்

(C) மூதுரை (D) வெற்றி வேற்கை

46. நறுந்தொகை எழுந்த காலம்

(A) கி.பி. பத்தாம் நூற்றாண்டு (B) கி.பி. பதினாறாம் நூற்றாண்டு

(C) கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு (D) கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

47. திரிகடுகத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை

(A) நாற்பது (B) முப்பது (C) எண்பது (D) நூறு

48. 'மகனறிவு தந்தை அறிவு' என்ற பழமொழி இடம்பெற்ற நூல்

(A) நாலடியார் (B) பழமொழி நானூறு

(C) ஏலாதி (D) ஐந்திணை ஐம்பது

49. அகப்பொருள் நூல்களில் மிகவும் பெரிய நூல்

(A) திருக்குறள் (B) பழமொழி நானூறு

(C) திணை மாலை நூற்றைம்பது (D) ஐந்திணை எழுபது

50. விநாயகர் அகவல், அசதிக் கோவை, ஞானக் குரல் போன்ற நூல்களை எழுதியவர் யார்?

(A) ஔவையார் (B) பாரதியார்

(C) அதிவீரராம பாண்டியர் (D) குமர குருபரர்

51. ஜெயகாந்தனின் நாவல்களின் ஒன்று

(A) கள்வனின் காதலி (B) அம்மா வந்தாள்

(C) பாரிசுக்குப் போ (D) எதுவும் அன்று

52. தமிழில் முதலில் எழுந்த நவீன இல்ககிய வகை

(A) சிறுகதை (B) நாவல்

(C) புதுக்கவிதை (D) எதுவும் அன்று

53. பாரதிதாசன் நடத்திய இதழின் பெயர்

(A) கலைமகள் (B) கலாமோகினி (C) குயில் (D) மயில்

54. தமிழ்வாணன் எந்த வகை நாவல் எழுதிப் புகழ்பெற்றார்

(A) வரலாற்று நாவல் (B) துப்பறியும் நாவல்

(C) சமூக நாவல் (D) எதுவும் அன்று

55. வ.வே.சு. அய்யர் எந்த வகை இலக்கியத்தை அறிமுகப்படுத்தினார்?

(A) சிறுகதை (B) நாவல்

(C) புதுக்கவிதை (D) எதுவும் அன்று

56. கல்கியின் வரலாற்று நாவல்களில் ஒன்ரு

(A) விஷ்ணுபுரம் (B) கடல்புறா

(C) பொன்னியின் செல்வன் (D) எதுவும் அன்று

57. புதுச்சேரி எழுத்தாளர்களில் சாகித்திய அக்காதமி விருது பெற்றவர்

(A) பிரபஞ்சன் (B) பாவண்ணன்

(C) அரிமதி தென்னகன் (D) எவரும் இலர்

58. புதுவையில் இருந்து வெளிவந்த இதழ்

(A) கணையாழி
(B) தீராநதி
(C) நிறப்பிரிகை
(D) எதுவும் அன்று

59. பாரதியின் முப்பெரும் பாடல்களின் ஒன்று

(A) குடும்ப விளக்கு
(B) கண்ணன் பாட்டு
(C) பாண்டியன் பரிசு
(D) எதுவும் அன்று

60. புதுச்சேரிப் பெண் கவிஞர்களுள் ஒருவர்

(A) மாலதி மைத்ரி
(B) குட்டி ரேவதி
(C) சல்மா
(D) எவரும் இல்லை

61. 'பதவியல்' இடம்பெற்றுள்ள நூல்

(A) மாறன் அகப்பொருள்
(B) நேமி நாதம்
(C) நன்னூல்
(D) எதுவும் இல்லை

62. வினைச்சொல்லின் இலக்கணம்

(A) வேற்றுமை ஏற்றல்
(B) காலம் காட்டுதல்
(C) பயனிலைக் கோடல்
(D) எதுவும் இல்லை

63. ஒரு நாளை ஆறாகப் பகுப்பது

(A) பெரும்பொழுது
(B) சிறுபொழுது
(C) காரும் மாலையும் சார்ந்து வருவது
(D) எதுவும் இல்லை

64. 'நிரைகவர்தல்' இடம்பெறும் புறத்திணை

(A) வஞ்சி
(B) உழிஞை
(C) வெட்சி
(D) எதுவும் இல்லை

65. 'தளை'யைத் தனி உறுப்பாகக் கூறும் நூல்

(A) தொல்காப்பியம்
(B) நம்பி அகப்பொருள்
(C) யாப்பருங்கலக்காரிகை
(D) எதுவும் இல்லை

66. காய் முன் நிறை வருவது

(A) நேர் ஒன்றிய ஆசிரியத் தளை (B) ஒன்றிய வஞ்சித் தளை

(C) வெண்சீர் வெண்டளை (D) எதுவும் இல்லை

67. தமிழில் ஆறாவது இலக்கண வகையாகக் கருதப்படுவது

(A) பாட்டியல் இலக்கணம் (B) நிகண்டு இலக்கணம்

(C) அகராதி இலக்கணம் (D) எதுவும் இல்லை

68. 'போல' என்பது

(A) உருவகம் (B) உவமை உருபு

(C) வேற்றுமை உருபு (D) எதுவும் இல்லை

69. 'மொடுமொடுத்தது' இத்தொடர்

(A) அடுக்குத் தொடர் (B) இரட்டைக் கிளவி

(C) பொருள்கோள் (D) எதுவும் இல்லை

70. சார்பெழுத்துக்கள் பெறும் மாத்திரையின் அளவு

(A) கால் மாத்திரை (B) அரை மாத்திரை

(C) இரண்டு மாத்திரைகள் (D) எதுவும் இல்லை

71. தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பாடியவர்

(A) தொல்காப்பியர் (B) இளம்பூரணர்

(C) பனம்பாரனார் (D) தெய்வச் சிலையார்

72. பிரபந்த வேந்தர் என்று போற்றப்படுபவர்

(A) வீரமா முனிவர் (B) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(C) பட்டினத்தார் (D) குமரகுருபரர்

73. நம்பி அகப்பொருள் நூலின் ஆசிரியர்

(A) நாற்கவிராச நம்பி (B) ஐயனாரிதனார்

(C) அமிர்த சாகரர் (D) எவரும் இல்லை

74. 'உலா' எந்தப் பா வகையில் பாடப்படுவது

(A) ஆசிரியப்பா (B) கலிவெண்பா (C) கலிப்பா (D) மருட்பா

75. யாப்பருங்கலக்காரிகையில் மொத்தம் இடம்பெற்ற இயல்கள்

(A) மூன்று (B) ஐந்து (C) ஒன்பது (D) பத்து

76. மோகவதைப் பரணியைப் பாடியவர்

(A) தத்துவராயர் (B) செயங்கொண்டார்

(C) ஒட்டக்கூத்தர் (D) கவிராயர்

77. 'சிற்றதிகாரம்' எனப் போற்றப்பெறும் நூல்

(A) வீர சோழியம் (B) நன்னூல்

(C) நேமிநாதம் (D) மாறன் அலங்காரம்

78. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் பாடியவர்

(A) குமர குருபரர் (B) அருணகிரி

(C) வள்ளலார் (D) பகழிக்கூத்தர்

79. இலக்கண விளக்கச் சூறாவளி படைத்தவர்

(A) சிவஞானமுனிவர் (B) ஆறுமுக நாவலர்

(C) பவணந்தி முனிவர் (D) ஐயனாரிதனார்

80. 'மருத நில நந்தா விளக்கம்' எனப் போற்றப்படும் இலக்கிய வகை

(A) பள்ளு (B) குறவஞ்சி (C) ஊசல் (D) கலம்பகம்

81. பாரதிதாசனுக்குச் சாகித்திய அக்காதமி விருதினைப் பெற்றுத் தந்த நூல்

(A) அழகின் சிரிப்பு (B) குடும்ப விளக்கு

(C) பிசிராந்தையார் (D) புரட்சிக் கவி

82. கவியரசர் கண்ணதாசன் நடத்திய இதழின் பெயர்

(A) குயில் (B) தென்றல் (C) அமுதசுரபி (D) கலைமகள்

83. 'கண்ணீர்ப்பூக்கள்' என்னும் புதுக் கவிதைத் தொகுப்பை எழுதியவர்

(A) நா. காமராசன் (B) வைரமுத்து (C) மு. மேத்தா (D) தமிழன்பன்

84. பாரதியார் மறைந்த ஆண்டு

(A) 1919 (B) 1920 (C) 1921 (D) 1922

85. தமிழில் முதல் நாவலை எழுதியவர்

(A) மாதவையா (B) வேதநாயகம் பிள்ளை

(C) இராஜம் அய்யர் (D) கல்கி

86. 'அலை ஓசை' என்றும் படைப்பைத் தந்தவர்

(A) சாண்டில்யன் (B) கல்கி

(C) கோவி. மணிசேகரன் (D) பிரபஞ்சன்

87. 'ஆட்டனத்தி ஆதிமந்தி' என்னும் படைப்பைத் தந்தவர்

(A) வாலி (B) புலமைப் பித்தன்

(C) கண்ணதாசன் (D) பாரதிதாசன்

88. பாரதிதாசனைப் பின்பற்றிப் பாடல்கள் புனைந்தவர்

(A) மாயவனாதன் (B) வாணிதாசன்

(C) முத்துலிங்கம் (D) ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

89. 'குளத்தங்கரை அரச மரம் சொன்ன கதை' என்னும் படைப்பைத் தந்தவர்

(A) பாரதியார் (B) ச.து.சு. யோகியார்

(C) வ.வே.சு. அய்யர் (D) புதுமைப் பித்தன்

90. 'என் சரித்திரம்' என்ற பெயரில் சுய சரிதையை எழுதியவர்

(A) சி.வை. தாமோதரம் பிள்ளை (B) உ.வே. சாமிநாத அய்யர்

(C) வெள்ளை வாரனார் (D) தேசிய விநாயகம் பிள்ளை

91. 'திருவரங்க நாதனையும், தில்லை நடராசையும் பீரங்கி வைத்துப் பிளக்கும் நாள் எந்த நாளோ' என்று பாடியவர்

(A) தமிழ் ஒளி (B) பாரதிதாசன் (C) சுரதா (D) நா. காமராசன்

92. 'தத்துவ போதகர்' என்றழைக்கப்படும் கிறித்துவப் பாதிரி மார்

(A) இராபர்ட்-டி-நொபிலி (B) ஜோசெப் கான்ச்டான்டையின் பெஸ்க்கி

(C) கால்டு வெல் (D) ஜி.யூ. போப்

93. 'தீ சுடும் என்றால், அது உரைநடை. தீ இனிது என்றால் அது கவிதை' என்று கூறியவர்

(A) சி.சு. செல்லப்பா (B) பசுவய்யா (C) நா. பிச்ச மூர்த்தி (D) சி. மணி

94. 'தமிழச்சி' என்ற காப்பியத்தைப் படைத்தளித்தவர்

(A) பாரதிதாசன் (B) வாணிதாசன் (C) கண்ணதாசன் (D) தமிழ் ஒளி

95. 'ஆராய்ச்சி' இதழைத் தொடங்கி நடத்தியவர்

(A) நா. வானமா மலை
(B) இரகுநாதன்
(C) எஸ். தோதாத்ரி
(D) கோ. கேசவன்

96. சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த பெண் நாவல் ஆசிரியர்

(A) வை.மு. கோதைநாயகி அம்மாள்
(B) கிருபாபாய் சத்தியநாதன்
(C) பண்டிதை விசாலாட்சி அம்மாள்
(D) மூவலூர் இராமாமிர்தம் அம்மாள்

97. 'மனோன்மணியம்' நாடகம் எந்த நூலின் தழுவல்

(A) ஆசிய ஜோதி
(B) இரகசிய வழி
(C) திருப்பயணியின் முன்னேற்றம்
(D) இறைவனின் நகரம்

98. அண்மையில் சாகித்திய அக்காதமி விருது பெற்ற பா. வெங்கடேசனின் படைப்பு

(A) காவற்கோட்டம்
(B) நெடுங்குருதி
(C) விஷ்ணுபுரம்
(D) எட்டுத்திக்கும் மத யானை

99. 'கரிசல் எழுத்தாளர்' என்று அழைக்கப்படுபவர்

(A) ஆர். சண்முக சுந்தரம்
(B) புதுமைப் பித்தன்
(C) கி. இராஜநாராயணன்
(D) நாஞ்சில் நாடன்

100. 'சரஸ்வதி காலம்' என்ற நூலின் ஆசிரியர்

(A) பி.எஸ். இராமையா
(B) கு. அழகிரிசாமி
(C) க.நா. சுப்பிரமணியன்
(D) வல்லிக்கண்ணன்